# பிரசவத்தின்போது (குழந்தை பெற்றெடுக்கும்போது) தண்டுவட மேல்சவ்வுபகுதி – நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டியவை

இது ஒரு சிறிய தொகுப்புரையாகும். பிரசவத்தின்போதைய வலி நிவாரணம் (Pain Relief in Labour) எனும் பிரிவில் முழுமையான தகவல்கள் உள்ளன. உங்களுக்குப் புரிபடாதது ஏதும் இருப்பின் உங்கள் மயக்க மருந்து மருத்துவருடன் கலந்துரையாடவும்.

## உங்கள் தண்டுவட மேல்சவ்வுபகுதியை சரிசெய்துகொள்ளுதல்

- உங்களுக்கு ரத்தநாளம் மூலமாக செலுத்தக்கூடிய ஒரு புனல் போன்ற உபகரணம் அல்லது சொட்டு சொட்டாக செலுத்தும் உபகரணம் தேவை.
- தண்டுவட மேல்சவ்வுபகுதிக்கு மயக்க மருந்து செலுத்தப்படும்போது, நீங்கள் அசையாதிருக்க வேண்டும்; உங்களுக்கு ஏதேனும் சுருக்கம் ஏற்படுகிறது எனில் உங்கள் மயக்க மருந்து மருத்துவரிடம் கூறவும்.
- வழக்கமாகவே, இதை அமைப்பதற்கு 20 நிமிடங்களும், வேலை செய்வதற்கு 20 நிமிடங்களும் ஆகும்.
- சில தண்டுவட மேல்சவ்வுபகுதியில் மயக்க மருந்துகள் முழுமையாக வேலை செய்யாது என்பதால் அளவு சரி செய்ய வேண்டும் அல்லது மாற்றிக் கொடுக்க வேண்டும்.

## தண்டுவட மேல்சவ்வுபகுதி சார்ந்த மயக்க மருந்தின் பயன்கள்

- இது வழக்கமாகவே மிக அருமையான வலி நிவாரணம் அளிக்கிறது.
- சில சமயங்களில் விரைவான நிவாரணத்திற்காக தண்டுவடத்திலேயே இப்படி செய்யப்படுகிறது.
- மற்றும் சில சமயங்களில் படுக்கையில் நீங்கள் புரள்வதற்கு வசதியாக குறிப்பிட்ட பகுதியின் மயக்க மருந்தின் அளவு அல்லது அதன் வகை மாற்றப்படலாம். இது குறைவான (அல்லது அசைவதற்கான) மருந்தளவு கொண்ட, தண்டுவட வால்பகுதி சார்ந்த மயக்க மருந்து.
- பொதுவாகவே தண்டுவட மேல்சவ்வுபகுதி சார்ந்த மயக்க மருந்துகள் உங்கள் சிசுவினைப் பாதிப்பதில்லை.
- அறுவை சிகிச்சை செய்து குழந்தை பிறக்க வைப்பதற்காக, தேவைப்பட்டால் இன்னும் கொஞ்சம் அதிக மருந்து செலுத்தப்படலாம்.

## உங்களுக்கு அளிக்கப்படும் தண்டுவட மேல்சவ்வுபகுதி சார்ந்த மயக்க மருந்தினால் ஏற்படக்கூடிய பிரச்சனைகள்

- திரும்பத் திரும்பக் செலுத்தப்படும் வீரியமிக்க குறிப்பிட்ட பகுதி மயக்க மருந்தானது, தற்காலிகமான பலவீனத்தை கால்களில் ஏற்படுத்தலாம் மற்றும் கிடுக்கிகள் அல்லது வெற்றிட கருவி மூலமாக குழந்தை பிறக்க வைக்க வேண்டிய ஆபத்தினை உண்டாக்கலாம்.
- பிரசவத்தின் இரண்டாம் நிலையை தண்டுவட மேல்சவ்வுபகுதி சார்ந்த மயக்க மருந்தானது சற்று வேகம் குறைய வைக்கலாம்.
- தண்டுவட மேல்சவ்வுபகுதி சார்ந்த மயக்க மருந்து கொடுக்கப்பட்ட சமயத்தில், உங்களுக்கு குறைந்த ரத்த அழுத்தம், நமைச்சல் அல்லது காய்ச்சல் உண்டாகலாம்.
- தண்டுவட மேல்சவ்வுபகுதி சார்ந்த மயக்க மருந்து கொடுத்த பகுதி இளகிப்போகலாம் ஆனால் இது வழக்கமாகவே சில நாட்களுக்கு மட்டுமே இருக்கும். முதுகு வலி என்பது தண்டுவட மேல்சவ்வுபகுதி சார்ந்த மயக்க மருந்தினால் ஏற்படுவதில்லை, ஆனால், எந்த ஒரு கர்ப்ப பெண்ணுக்கும் இது சாதாரணமானதே.

## பிரசவ வலியை குறைப்பதற்க்காக தண்டுவட மேல்சவ்வில் அல்லது தண்டுவடத்தில் மயக்க மருந்து போடுவதின் அபாயங்கள்

| ஆபத்தின் வகை | இது எந்த அளவுக்கு அடிக்கடி ஏற்படுகிறது? | இது எந்த அளவுக்கு |
|---|---|---|
| ரத்த அழுத்தம் குறிப்பிடத்தக்க வகையில் குறைதல் | 50 பெண்களில் ஒருவர் | எப்போதாவது |
| பிரசவ வலியைக் குறைப்பதற்கு போதுமானபடி வேலை செய்யவில்லை என்பதால், வலியைக் குறைப்பதற்கான வேறு வழிகள் உங்களுக்குத்தேவை | 8 பெண்களில் ஒருவர் | பொதுவானது |
| அறுவை சிகிச்சை  முறையில் குழந்தை பிறக்க வைப்பதற்கு போதுமானபடி வேலை செய்யவில்லை என்றால், உங்களுக்கு பொதுவான மயக்க மருந்து கொடுப்பது அவசியம் | 20 பெண்களில் ஒருவர் | சில சமயங்களில் |
| கடுமையான தலைவலி | 100 பெண்களில் ஒருவர் (தண்டுவட மேல்சவ்வு பகுதி) | பொதுவாக இல்லாதது |
| நரம்பு சேதம் (கால் அல்லது பாதத்தில் ஒரு சிறுபரப்பில் மறத்துப் போதல் அல்லது கால் பலவீனமாதல்) | தற்காலிகமானது -1,000 பெண்களில் ஒருவர் | அரிது |
| 6 மாதங்களுக்கும் மேலாக இந்த விளைவுகள் நீடித்தல் | நிரந்தரமானது -13,000 பெண்களில் ஒருவர் | அரிது |
| தண்டுவட மேல்சவ்வுபகுதி சார்ந்த மயக்க மருந்து | 50,000 பெண்களில் | மிகவும் |
| மூளைக்காய்ச்சல் | 100,000 பெண்களில் ஒருவர் | மிகவும் அரிது |
| தண்டுவட மேல்சவ்வுபகுதி சார்ந்த மயக்க மருந்து காரணமான ரத்தம் உறைதல் (ரத்தக் கட்டி) | 170,000 பெண்களில் ஒருவர் | மிகவும் அரிது |
| விபத்தின் காரணமான சுயநினைவு இழந்த தன்மை | 100,000 பெண்களில் ஒருவர் | மிகவும் அரிது |
| கடுமையான காயம்,  பக்கவாதம் கொண்டபடி இருத்தல் உட்பட | 250,000 பெண்களில் ஒருவர் | மிக மிக அரிது |

வெளியிடப்பட்ட ஆவணங்களிலிருந்து கிடைக்கும் தகவல்கள் இந்த அபாயங்கள் அனைத்திற்கும் துல்லியமான விவரங்களை அளிக்காது. மேலே காட்டப்பட்டுள்ள எண்ணிக்கைகள் கணிக்கப்பட்டவையாகும்; வெவ்வேறு மருத்துவமனைகளில் இவை

வெவ்வேறாக இருக்கலாம்.

August 2017